Agri-Horticultural Gardens

* 295 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the conditions under which the Horticultural Society was given the site where the botanical gardens were situated previously;

(*b*) whether the Government are aware that the site is now being used for running a canteen and not as a botanical garden; and

(*c*) what action the Government have taken in the matter?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) The lands in R.S. Nos. 13 and 64 of Mylapore, Madras, were placed at the disposal of the Agri-Horticultural Society, Madras, for the specific purpose of Agri-Horticultural gardens subject to the usual conditions and the special condition that the lands should be held by the Society so long as it continues to pursue the object of the institution.

(*b*) Yes.

(*c*) The matter is *subjudice*.

திரு. கே. மூக்கையாத் தேவர்: ஸார், இந்த இடம் அக்ரி-ஹார்ட்டி கல்சரல் சொஸைட்டிக்காக கொடுக்கப்பட்டது. அதன்படி இதில் என்ன ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன? இப்போது அந்த இடத்தை ஒரு ஹோட்டலுக்கு கொடுத்திருப்பதன் நோக்கம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: புகார்கள் பூராவும் கோர்ட்டின் முன்னால் இருப்பதினால் நான் பதில் சொல்ல தயாராக இல்லை.

திரு. சா. கணேசன்: கோர்ட் முன்னால் இந்த விஷயம் இருப்பதினால், அதற்குப் பாதகம் இல்லாத அளவில் சொல்லலாம். இதன் பேரில் அபிப்பிராயம் சொல்லுவதுதான் கோர்ட்டுக்கு விரோதமாக இருக்குமே தவிர தற்பொழுதுள்ள நிலைமையை தெரிவிப்பதில் கோர்ட்டுக்கு எந்தவிதமான பாதகமும் இருக்க மாட்டாது என்ற நினைப்பில் நான் சபாநாயகர் அவர்களின் அனுமதியோடு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர்: அபிப்பிராயமும் நிலைமையும் சேர்ந்து தான் வரும்.

திரு. சா. கணேசன்: அக்ரி-ஹார்டிகல்சரல் ஸொஸைட்டிக்கு கொடுத்த இந்த இடத்தில் சிற்றுண்டிசாலை நடைபெறுகின்றதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்த விஷயம் பூராவும் கோர்ட்டில் இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: ஸார், இப்போது உணவு விடுதி நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் தொடர்ந்து மேலும் மேலும் அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏதாவது ஸ்டே வாங்கி நிறுத்தப்படுமா?

19th November 1963]

கனம் திரு. வெ. ராமையா : கோர்ட் முன்னால் இந்த விஷயம் இருக்கிறது. கோர்ட் என்ன முடிவு எடுக்கிறதோ அதன்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சா. கணேசன் : கோர்ட்டில் இருக்கின்ற இந்த விஷயத்தில் அரசாங்கம் வாதியாக இருந்து செயல்படுகிறதா, அல்லது பிரதி வாதியாக இருந்து செயல்படுகிறதா ?

கனம் சபாநாயகர் : அல்லது வேறு ஏதாவது வகையில் செயல் படுகிறதா ? . . .

கனம் திரு. வெ. ராமையா : ஸொஸைட்டி தான் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறது.

திரு. கே. மூக்கையாத் தேவர் : ஸார், இந்த இடம் எந்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற வில்லை என்பதை அரசாங்கம் உணருகிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : கோர்ட் தான் இதில் முடிவு செய்ய வேண்டும். நான் எப்படி அபிப்பிராயம் சொல்ல முடியும் ?

அனாதை இல்லங்கள் (சேலம் மாவட்டம்)

* 296 கேள்வி.—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை அனாதை இல்லங்கள் சர்க்கார் உதவிபெற்று நடைபெறுகின்றன ?

(இ) அவைகளில் என்னென்ன தொழில்கள் கற்றுக்கொடுக்கப் படுகின்றன ?

(உ) இவைகளுக்காக சர்க்கார் கொடுக்கும் நிதி உதவி எவ்வளவு ?

(எ) ராசிபுரத்தில் நடைபெறும் அனாதை இல்லத்தைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்துள்ளதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) 18 அனாதை இல்லங்கள்.

(இ) அனாதை இல்லங்களிலுள்ள பிள்ளைகள் அனைவரும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் படிக்கிறார்கள். மரவனேரியிலுள்ள செயிண்ட் தெர்சா அனாதை இல்லத்தில் நெசவு, தச்சுத் தொழில், புத்தகம் பைண்டு செய்தல் ஆகியவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப் படுகின்றது.

(உ) சேலம் மாவட்டத்திலுள்ள அனாதை இல்லங்களுக்கு மானியமாக 1962-63-ல் ரூ. 1,02,149 அனுமதிக்கப்பட்டது.

(எ) மாவட்டக் கல்வி அதிகாரி 25—5—1963லும், 17—6—1963 லும் திடீரென பார்வையிட்டதின் மேல் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அனாதை இல்லம் அது இருக்கவேண்டிய விலாசத்தில் செயலாற்றி வராததாகத் தெரிந்தது. கல்வித் துறை டைரக்டர் அந்த இல்ல நிர்வாகியின் மீது தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.